<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>MCOP.No.7/2020</u>**

பெயர் :– அபினேஷ் அஷ்வின் (P.W.–2)
த/பெ. :– சுவாமிநாதன்
தேதி :– 18.07.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>:–**

இறந்துபோன கர்ணன் என்பவர் எனது ஊர்க்காரர் ஆவார். நான் திருவாவடுதுறையில் வசித்து வருகிறேன். இறந்துபோன நபர் தேரிழந்தூரில் வசித்தார். நான் தேரிழந்தூரிலிருந்து மயிலாடுதுறைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றேன் அப்போது விபத்து நடந்தது. விபத்தானது தெற்கு வடக்கு சாலையில் நடந்தது. நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தேன். இறந்துபோன நபரும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பயணம் செய்தார். இறந்த நபர் TVS Scooty வாகனத்தில் வந்தார். அவர் தனது வாகனத்தில் மூட்டை ஏற்றி வந்தார் எத்தனை மூட்டை இருந்தது என்று எனக்கு தெரியாது. அவர் எனது வாகனத்திற்கு முன்னால் சென்றார். டாட்டா ஏசி வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தான் சென்றது. விபத்தில்இறந்தவருக்கு அவரது தலையின் பின் பகுதியில் காயம்பட்டது. சம்பவம் நடந்த இடத்தில் 10, 15 நபர்கள் அந்த ஊர்க்காரர்கள் இருந்தார்கள்.

விபத்தில இறந்த கர்ணன் குடும்பத்தாரை எனக்கு தெரியுமா என்றால் அவரது மனைவியை தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் கலியமூர்த்தி வயலில் சம்பவத்தின்போது நின்றுகொண்டிருந்தேன் என்று உள்ளது என்றால் சரிதான். 1/2 மணி நேரம் சம்பவ இடத்தில் இருந்தேன். விபத்திற்கு பிறகு விபத்தில் காயம்பட்டவருடன் 108 ஆம்புலன்ஸில் நானும் உடன் சென்றேன். கர்ணன் வீட்டிற்கு விபத்து சம்பந்தமான செய்தியை ஊரில் உள்ளவர்கள் கூறினார்கள். நான் மருத்துமவனையில் இருந்தபோது கர்ணன் மனைவி வந்துவிட்டார். நான் மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் கர்ணனை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவனைக்கு உடன் அழைத்துச்சென்றார்கள் நான் போகவில்லை. காவல் துறையினர் என்னை எந்த காலகட்டத்திலும் விசாரணை செய்யவில்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் கர்ணன் எனக்கு

**ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.